REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 159

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் :- அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு :	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை : மார்கழி 1உ புதன் (16—12—53) ★ ★ ★ வெளியூர் : மார்கழி 2உ வியாழன் (17—12—53)

தூத்துக்குடித் தோழர்களை ஜாமீனில் விட மறுப்பு

ஆயுள் தண்டனை தரத்தக்க கடுமையான குற்றச்சாட்டுகள் என மனு தள்ளப்பட்டது

திருநெல்வேலி, டிச. 14—

தூத்துக்குடி வழக்கில் முக்கியமாக விளங்கும் தோழர்கள் கே. வி. கே. சாமி, தங்கப்பழம், நடராசன், சிவசாமி ஆகிய நான்கு பேர்களையும் ஜாமீனில் விடக் கோரி, திருநெல்வேலி செஷன்ஸ் ஜட்ஜ்முன் ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஆயுள் தண்டனை தரக்கூடிய பல கடுமையான சட்டப் பிரிவுகளின்படி அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதால், அவர்களை இப்பொழுது ஜாமீனில் விடுவதற்கில்லை என்று கூறி, செஷன்ஸ் ஜட்ஜ் ஜாமீன் மனுவைத் தள்ளிவிட்டார்.

[தூத்துக்குடித் தோழர்கள் ஜூலை 15-ந் தேதியன்று கைது செய்யப்பட்டனர். அன்றிலிருந்து இன்று வரை, நடந்த ஆறுமாத காலமாகச் சிறையிலேயே இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது]

நான்கு வல்லரசுகள் மாநாடு

1,000 நிருபர்கள் பெர்லின் வருவர்

லண்டன், டிச 16—

பெர்லினில், ஜனவரி 4-ந் தேதி நடைபெறவிருக்கும் நான்கு வல்லரசுகள் மாநாட்டையொட்டி, நிபுணர்கள், ஆலோசகர்கள், அதிகாரிகள் ஆக சுமார் 4,000 பேர் வருவர் என்றும், உலகின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 1000 நிருபர்கள் வருவர் என்றும் கூறப்படுகிறது.

நேரு—ஒரு - - கம்யூனிஸ்டா?

ஜார்ஜ்டவுன், டிச. 15—

"உலக சரித்திரக் கண்ணோட்டம்' என்று நேரு எழுதிய புத்தகம் பொதுவுடைமைப் பிரச்சாரமானது," என்று தோழியர் ஜகன் மீதும் இதர ஒன்பது பேர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கில், கோர்ட்டில் சாட்சியமளிக்கையில், பிரிட்டிஷ் கயானா போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினர்.

"கத்தியும்—பெரியாரும்"

சென்னை, டிச. 15—

திராவிடக் கழகத்தினர் கத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்று பெரியார் ஈ. வே. ரா. ஆத்தூரில் பேசியிருப்பது, பொது மக்களின் அமைதிக்குப் பாதகமானதெனவும், அதை விவாதிக்க வேண்டுமெனவும் தோழர் உ. நஞ்சப்பா இன்று அசெம்பிளியில் ஓர் அவசரத் தீர்மானம் கொண்டு வந்தார்.

சபாநாயகர், இத் தீர்மானம் அவசரமானதல்ல என்று கூறி நிராகரித்தார்.

தோழர் மதியழகனுக்கு குதூகல வரவேற்பு

கணியூர் தோழர்களின் ஆர்வம்

கணியூர், டிசம்பர், 15—

ஆச்சாரியார் சர்க்காரின் அடக்குமுறைக்கும் பலியாகி மூன்று மாத சிறை தண்டனை பெற்று, 13—12—53 ஞாயிறு ஊர் திரும்புகிறார் என்ற செய்தி எட்டி, அவரை வரவேற்க இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் மடத்துக்குளம் ரயில்வே நிலையத்தில் காத்துக் கிடந்தனர். தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் சென்னையிலிருந்து சரியாக 1-30 மணி வண்டியில் வந்தார்கள். ஏராளமான மலர்மாலைகளுடன் கிளைக் கழகத் தோழர்கள் காத்திருந்தனர்.

புன்முறுவல் பூத்த முகத்துடன் ரயிலை விட்டு தி. மு. கழகத் துணைச் செயலாளர் இறங்கியவுடன் கணியூர் அழகிரி மன்றம், தி. மு. கழகம், உடுமலை தி. மு. கழகம் ஆகியவைகளின் சார்பிலும், மற்றும் பல கிளைக் கழகங்களின் சார்பிலும் மாலை அணிவித்தனர். புகைப்படங்களும் தோழர்களால் எடுக்கப்பட்டது. நேராக அழகிரி மன்றத்திற்கு மாணவர் தலைவர் மதியழகன் அவர்கள் அழைத்து வரப்பட்டு, சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

பின்னர் இளைஞர் அறிவகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, தோழர்கள் அனைவருக்கும் தேநீர் கொடுக்கப்பட்டது.

அன்று மதியம் தோழர் மதியழகன் அவர்கள் இல்லத்தில், வந்திருந்த இயக்கத் தோழர்களுக்கு விருந்து ஒன்று நடத்தப்பட்டது

மக்கள் சபை உறுப்பினர்கள்

நல்ல அரிசியுடன் வரும்படி அறிவிப்பு

புது டில்லி, டிச. 15—

தலைநகரில் உள்ள எம். பி.-க்கள் மட்ட ரகமான அரிசியை சாப்பிட நேருகிறதென புகார் செய்ததனையால், மக்கள் சபை உறுப்பினர்கள் டெல்லி வரும்போது, தங்கள் ஊரிலிருந்தே நல்ல அரிசியையும் கொண்டு வரும்படி தான் தந்தி கொடுத்துவிட்டதாக துணை உணவு அமைச்சர் கிருஷ்ணப்பா தெரிவித்தார்.

திரு.—கொச்சி, பெப்சு பகுதிகளில் பொதுத் தேர்தல்கள்

1954 மார்ச் முதல் வாரத்தில் நடைபெறும்

டெல்லி, டிச. 15—

திருவாங்கூர்—கொச்சியிலும், பெப்சு (பாடியாலா—கிழக்குப் பஞ்சாப்) மாநிலத்திலும், சட்ட சபைப் பொதுத் தேர்தல்கள் 1954 மார்ச் முதல் வாரத்தில் நடைபெறுமென இன்று இந்திய உள்நாட்டு மந்திரி டாக்டர் கைலாசநாத்கட்ஜு அறிவித்தார்.

பெப்சு மாநிலத்தில், மந்திரி சபை கலைக்கப்பட்டபின், சட்ட சபை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டபின், இந்திய குடியரசு தலைவரின் நேரடி ஆட்சி கீழ் கொண்டுவரப்பட்டது

திருவாங்கூர் — கொச்சியில் இருந்த காங்கிரஸ் மந்திரி சபையின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றிபெற்றதால், மந்திரி சபை நீக்கப்பட்டு, 1953 செப்டம்பர் 24-ந் தேதி சட்டசபை கலைக்கப்பட்டது காங்கிரஸ் மந்திரிகளே தொடர்ந்து பதவிகளில் இருந்து வருகின்றனர்.

கோர்ட்டில் அண்ணாதுரை, நெடுஞ்செழியன்

திருநெல்வேலி, டிச. 14—

தூத்துக்குடி சதி வழக்கு பிரத்தியேக முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்முன், இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தூத்துக்குடி தோல் வியாபாரியும், கௌரவ மாஜிஸ்திரேட்டுமான திரு ராமசாமி அய்யர் பிராசிக்யூஷன் தரப்பில் விசாரிக்கப்பட்டார். இன்று நீதிமன்றத்துக்கு வெளியே ஏராளமான பொதுமக்கள் குழுமியிருந்தனர். வழக்கு விசாரணையைக் கவனிக்க தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

திராவிடத்தை பாழாக்க டில்லியின் சதி

— (:) —

'அகில பாரதம்' என்பது வெறும் அங்கலாய்ப்புதானா?

தென்னாட்டின் குடிசைத் தொழிலுக்கு மாற்றாந்தாய் அநீதி ஏன்?

கிராமக் குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கு உதவியாயிருக்க, இந்திய அரசாங்கம் விடுத்த அழைப்புக் கிணங்க, வெளிநாட்டு நிபுணர்கள் 7 பேர் இப்போதுதான் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர், பெரிய அளவில் தொழிற்றுறையில் இறங்கியிருக்கும் நாடான அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள்.

இக்குழுவின் வேலையைப் பற்றி வெளிவந்த அரசாங்க அறிக்கையில், இக்குழுவுக்கு ஒரு சிபாரிசு முன்னமேயே செய்யப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், கிராமத் தொழில்களுக்காகவும், சிறிய அளவில் செய்யப்படும் தொழில்களுக்காகவும், பல துறைத் தொழில் நுணுக்க நிலையமொன்றை நிறுவுவதுவே. இந்தியா முழுதுக்கும் ஒரே ஒரு சிறிய அளவில் செய்யப்படும் தொழிற் பயிற்சி நிறுவனம்! இது நடக்கக்கூடியதா? இந்திய அரசாங்கம் இத்தகைய விசித்திரமான வேலை என்றும் செய்ய முடியாது.

ஒருகால், வடஇந்தியாவுக்கு மட்டும் இந்திய அரசாங்கம் இத்தகைய பல துறைத் தொழில் நுணுக்க நிலையமொன்றை அமைத்துத் தரக் கருதியது போலும். ஏனென்றால், இக்குழு சுற்றுப் பயணம்

(3-ம் பக்கம் பார்க்க)

சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும்

—:X:—

சென்னை சர்க்கார் திரும்பி வருகிறது

சென்னை, டிச. 15—

"பெரியார் ராமசாமி நடத்தி வைக்கும் திருமணங்களே சுயமரியாதைத் திருமணம். இத்தகைய திருமணங்கள் செல்லாதென அண்மையில் ஐகோர்ட் தீர்ப்பளித்தது. அந்த முடிவு, குழந்தைகளின் சொத்துரிமையைப் பாதிக்குமாதலால், சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க மசோதா தயாரிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர். சு. ம. திருமணங்களை செல்லுபடியாக்குவதும், அத்திருமணங்களால் பிறக்கும் குழந்தைகளை சட்டபூர்வமாக்குவதுமே சர்க்கார் எண்ணம்."

"இனி நடக்கும் திருமணங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமாதலால், சட்டம் இவைகளுக்குப் பொருந்தும்படி செய்ய வேண்டியதில்லை. இதுவரை நடந்துள்ள சுயமரியாதை திருமணங்களை செல்லுபடியாக்க சட்டம் இயற்றுவது பற்றி சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்."

—இவ்வாறு, இன்றைய சென்னை சட்டசபை கூட்டத்தில், கேள்வி நேரத்தின்போது சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

(3-ம் பக்கம் பார்க்கவும்)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் அண்ணாதுரை
சென்னை 16—12—1953 புதன்

சென்னை அரசாங்கம் பின்பற்றுமா?

பர்தி அறப்போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்த தோழர் அசோக் மேத்தாவும், அவருடன் தண்டனை பெற்று காவலில் வைக்கப்பட்டிருந்த அறப்போர் வீரர்களனைவரும் உடனே விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தச் செய்தியானது எல்லோராலும் வரவேற்கப்படுவதாகும்.

பம்பாய் மாநிலத்தைச் சேர்ந்த பர்தி பகுதியில், உழவர்கள் படும் துன்பத்துக்கு வழி காண அரசியலார் மறுத்து வந்தனர். அதைத் தீர்க்கும் முறையிலும், காங்கிரஸ் மந்திரி சபையின் அலட்சியப் போக்குக்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையிலும் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியினர் தோழர் அசோக் மேத்தா தலைமையில் அறப்போர் தொடங்கினர்! அதில் ஈடுபட்ட குற்றத்திற்காகப் பலர் சட்டமன்றங்களில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். தலைவராக இருந்த அசோக் மேத்தா சட்டப் பிரிவுகளின்படி குற்றவாளியெனக் கருதப்பட்டு, பதினோரு மாதங்கள் சிறைவாசம் தரப்பட்டார். அறப்போரில் கலந்துகொண்ட பல தொண்டர்களுக்கு தண்டனையுடன் அபராதங்களும் விதிக்கப்பட்டது. தீர்ப்புக் கூறப்படாமல், விசாரணை அளவிலேயே சில வழக்குகள் இருந்தன. போடப்பட்ட அபராதங்களில் சில வசூலிக்கப்படாமலும், அவற்றை வசூலிப்பதற்காக பம்பாய் அரசாங்கம் 'ஜப்தி' போன்ற நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகவுமிருந்தது. இந்த நிலையில் பம்பாய் அரசாங்கம் தோழர் அசோக் மேத்தாவுக்கு மீதமிருந்த தண்டனைக் காலத்தை நீக்கிவிட்டு, நிபந்தனையின்றி விடுதலை செய்ததுடன், சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டிருந்த மற்ற அறப்போர் வீரர்களையும் உடனடியாக விடுவித்துள்ளது.

பர்தி அறப்போராட்டத்தினருக்கு பம்பாய் அரசாங்கத்தினர் அளித்த விடுதலைச் செய்தியைப் படிக்கும்பொழுது, சென்னை மாநிலத்தில் நடைபெற்ற அறப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களுக்கான தண்டனையை அதிகரித்திட ஆச்சாரியார் அரசாங்கம் மறுப்பது நினைவிற்கு வராமற் போகாது. பம்பாய், சென்னை இரு இடங்களிலும் ஓரே காங்கிரஸ் செல்வாக்கு பெற்ற மந்திரி சபைகள்— அண்ணல் காந்தியார் காட்டிய அறவழியை குறிக்கோளாகக் கொண்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் மந்திரி சபைகளே அமையப் பெற்றுள்ளன. பம்பாய் காங்கிரஸ் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் எடுத்த முடிவை— காட்டிய அரசியல் நேர்மையை, சென்னை முதன் மந்திரி ராஜகோபாலாச்சாரி எடுக்க மறுக்கிறார்.

ஆட்சி பீடத்தில் அமரும் கட்சியினருக்கு, அதிகார வசதிகள் கிடைக்கின்றன. எதிர்க் கட்சியினர்மீது அடக்குமுறையை வீசி, சட்ட மன்றத்தில் நிறுத்தி, நீண்ட குற்றப் பத்திரிக்கைகளைப் படிக்கவும் முடிகிறது. மாற்றுக் கட்சியினர் என்பதற்காக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதுடன், சட்டப் புத்தகத்தில் காணப்படும் கடும் குற்றச்சாட்டுகள் தேடிப் பிடிக்கப்பட்டு வீசப்படுகின்றன. அரசியலுலகில் அதிகார வெறி மிகப் பொல்லாதது, அதிலும் எதிர்க் கட்சியினரை அழித்துவிட வேண்டுமென்ற ஆத்திரமும் ஒன்று சேர்ந்துவிட்டால் போதும், அது அந்த நாட்டில் எந்த வகையில் கூடுமோ அந்த வகையிலெல்லாம்— அடக்குமுறைச் சட்டங்களைத் தூவியோ, தடியடிகளை நடத்தியோ, துப்பாக்கி குண்டுகளைப் பாய்ச்சியோ, சிறைச்சாலைகளைத் திறந்து வைத்தோ, எதிர்க் கட்சியினருக்கு அல்லலைத் தர முற்படுவார்கள். அதனால்தான் ஆச்சாரியார் தமது அதிகாரத்தின் எல்லா வகையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்மீது தாக்குதலைப் புரிந்து வருகிறார்.

தோழர் அசோக் மேத்தாவுக்குத் தரப்பட்ட தண்டனைக் காலம் பதினோரு மாதங்களாகும். அவர் ஒன்றரை மாதம் அளவே சிறையிலிருந்தார், அதற்குள் பம்பாய் அரசாங்கம் அவரது மிகுந்த தண்டனையை நீக்கிவிட்டு, விடுவித்தது. ஆச்சாரியாரோ, மூன்று மாதத் தண்டனை பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை விடுவிக்க மறுத்தார். அவர்கள் தண்டனை காலம் முழுவதையும் அனுபவித்த பிறகே வெளிவர முடிந்தது. தலைவர்களை விடுவிக்க பொது மக்களும், மற்ற அரசியல் வாதிகளும் வேண்டுகோள் விடுத்தபோது, அன்பர் ஆச்சாரியாரும், அவருக்குப் பாதுகாவலராக விளங்கும் காமராஜர் அவர்களும், "சட்டத்தின்படி அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்; நாங்களொன்றும் செய்வதற்கில்லை" என்று கைவிரித்தனர். ஆனால் பம்பாய் அரசாங்கம், இரண்டு நாட்களுக்கு முன், சட்டப்படி தந்த தண்டனைகளை அழித்துவிட்டு, அனைவரையும் விடுவித்துள்ளது.

விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளை, இனி வசூலிக்க வேண்டாமென பம்பாய் அரசாங்கம் உத்தரவு தந்துள்ளது. ஆச்சாரியார் அரசாங்கமோ, அபராதத்தைக் கட்ட மறுத்து, அதற்காகச் சிறை தண்டனையை அனுபவித்து பல தோழர்கள் வெளிவந்தபின்கூட, அவர்களுடைய அபராதத்தை வசூலிப்பதில் முனைந்து இருக்கிறது. கடிகாரமோ, மாடோ, வீட்டுச் சாமானோ, கன்றுக் குட்டியோ, எதுவாயிருந்தாலும் வீடு புகுந்து எடுத்துச் செல்லும் இழி நிலைக்கு வந்துவிட்டது.

மதுரை தி. மு. கழக சக்தி திரண்டெழுந்தது!

வரலாறு கண்டறியாத மாபெரும் ஊர்வலம்

திலகர் திடலில் மக்கள் கூட்டம் வழிந்து நின்றது

கருணாநிதி ஊர்வலமும், பாராட்டுக் கூட்டமும்

(விசேஷ நிருபர்)

மதுரை, டிச. 16—
13—12—53 ஞாயிறு காலை 11 மணிக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரசில் தோழர் மு. கருணாநிதி மதுரை வந்து சேர்ந்தார். புகைவண்டி நிலயத்தில் பல்லாயிரக் கணக்கான இயக்கத் தோழர்களும் பொது மக்களும் கூடி அவரை வரவேற்றார்கள்.

"அண்ணா வாழ்க! கருணாநிதி வாழ்க! தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கு! திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற வாழ்த்தொலிகள் வானைப் பிளந்தன. நூற்றுக் கணக்கான தொண்டர்கள் வழி வகுத்துக் கொடுத்தும் கூட, தோழர் கருணாநிதி அவர்களைப் புகைவண்டி நிலயத்திலிருந்து வெளியில் கொண்டு வருவதற்கு மிகச் சிரமமாகிவிட்டது.

தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், தம்பில்-தர்மலிங்கம், வி. பராங்குசம், எம். எஸ். மணி, திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன் அரையூர் அழகுமுத்து ஆகியவர்களும் தோழர் கருணாநிதியுடன் வந்தார்கள்.

தோழர்கள், எஸ். முத்து, எம். அய்யாசாமி, கே. எஸ். ராசமாணன், எம். ஆர். கணேசன், நா. ஆவுடையப்பன் ஆகியோர் தோழர் கருணாநிதியை முன்னின்று வரவேற்றனர். பல கழகங்களின் சார்பில் அவருக்கு மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

வாழ்த்துச் செய்யும் வாழ்த்தொலிகளுடன் தோழர் கருணாநிதி அவர்களைக் காரில் ஏற்றி, மதுரை நகர் தி. மு. கழக அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டது. அங்கு வந்து சிறிது நேரம் ஓய்வு எடுத்த பின் பகல் இரண்டு மணிக்கு மற்குவாசல் தாலமுத்து-நடராசன் படிப்பகத்தின் அருகில், நடராசர் வித்தியாசாலையில் நடைபெற்ற வள்ளியம்மாள்-பெரியசாமி திருமணத்திற்குச் சென்று மணமக்களைப் பாராட்டிப் பேசினார்.

ஊர்வலம்

மாலை 5-30 மணிக்கு தோழர் கருணாநிதி அவர்களையும், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களையும் இரண்டு குதிரைகள் பூட்டிய பீட்டன் வண்டியில் அமரவைத்து, மதுரை நகர் தி. மு. கழகத்திலிருந்து புறப்பட்டு, நான்கு மாசி வீதிகள் சுற்றி திலகர் திடலுக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது. ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான இயக்கத் தொண்டர்கள் அணிவகுத்து வர வெள்ளம்போல் மக்கள் கூட்டம் வாழ்த்தொலிகளுடன் தோழர் கருணாநிதியை வரவேற்ற காட்சி, மதுரை நகர் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். ஊர்வலம் சுற்றி வரும் வழியில் ஒவ்வொரு முக்கிய இடங்களில் வளைவுகள், தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், தோழர்கட்கு ஏராளமான மலர் மாலைகள் வழி நெடுக அணிவிக்கப்பட்டது.

பொதுக்கூட்டம்

மாலை 7 மணிக்கு, திலகர் திடலில், மதுரை நகர தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திலகர் திடல் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள்கூட்டம் நிறைந்திருந்தது. புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இளமுருகு-பொற்செல்வி, இரா. சுந்தரேசன் ஆகியோர் பேசியபின், தோழர் கருணாநிதி அவர்கள் பலத்த கைதட்டலுக்கிடையே பேசினார்.

"இங்கு நம்மைப் பார்த்துக் காட்டுமிராண்டிகள் என்று குறிப்பிட்டதைக் கண்டித்தும், ஆச்சாரியார் நம்மைப் பார்த்து, வெள்ளையர்களின் அடிவருடிகளாக இருந்த ஜஸ்டிஸ் கட்சியின் பரம்பரை என்று குறிப்பிட்டுக் கூறியதற்குத் தக்கபடி பதில் கூறியும், மற்றும் ஆச்சாரியாரின் அடக்குமுறைக் கொடுமைகளைக் கண்டித்தும், தூத்துக்குடி சதி வழக்கு நிதி உதவவேண்டிய அவசியம்

(3-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி நிதிக்கு மதுரையின் ஆயிரம் ரூபாய்

எம். ஜி. ராமச்சந்திரன் நாடகத்தில் கருணாநிதியிடம் தரப்பட்டது

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக, 13—12—53-ல் மதுரையில் நடத்தப்பட்ட, எம். ஜி. ஆர் -ன் 'இன்பக் கனவு' நாடகத்தில் தலைமை வகித்த தோழர் மு. கருணாநிதி அவர்களிடம், வசூலான தொகையில் ரூ. 1000 தூத்துக்குடி நிதிக்காக தோழர் முத்து அவர்களால் தரப்பட்டது. நாடக மேடையில் ஒரு தோழர் ஐந்து ரூபாய் நன்கொடை கருணாநிதியிடம் நிதிக்காக அளித்தார்.

பர்தி அறப்போரின் காரணமாக அரசாங்கத்தினரால் தொடுக்கப்பட்டு, சட்ட மன்றத்தில் முடிவடையாமல் இருந்த வழக்குகளை வாபஸ் பெற பம்பாய் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால் ஆச்சாரியாரைத் தாங்கி நிற்கும் சென்னை மந்திரிசபையோ தூத்துக்குடி, கல்லக்குடி போன்ற இடங்களில் அறப்போரில் ஈடுபட்ட கழகத் தோழர்கள்மீது சதி வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. பர்தி அறப்போர் வழக்குகளை வாபஸ் பெற்றதுபோல, இந்த வழக்குகளை வாபஸ் பெற ஆச்சாரியார் மறுக்கிறார், தமது ஆணவப் போக்கினால்—கழகத் தோழர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற திட்டத்தினால். மாற்றுக் கட்சியினர் மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், அங்கு நடந்த அடக்குமுறையின் கோரத் தாண்டவத்துக்குச் சமாதானம் கூற வேண்டிய அவசியத்திலும், ஆச்சாரியார் சதி வழக்குகளை வாபஸ் பெறாமல், கடுமையான முறையில் நடத்துகிறார்.

பம்பாய் காங்கிரஸ் மந்திரிசபை செய்ததைப் போல, சென்னை காங்கிரஸ் மந்திரி சபையினரும் செய்ய முடியும். "சட்டத்தின்படி நடப்பதை நாம் தடுக்க முடியாது" என்று தப்பித்துக்கொள்வதைவிட, தம்மிடமுள்ள அதிகாரத்தின்படி, எதிர்க் கட்சியினர்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை திரும்பிப் பெறவேண்டும். இவ்வாறு சட்டமன்றங்களில் இருக்கும் வழக்குகளை வாபஸ் பெறுவதையும், தரப்பட்ட தண்டனைகளை—விதிக்கப்பட்ட அபராதங்களை நீக்கிவிடுவதையும், ஆச்சாரியாருக்குத் தெரியாதா என்றால், நன்றாகத் தெரியும். அவரே அவ்வாறு செய்திருக்கிறார், ஆந்திரக் கிளர்ச்சியில் தண்டிக்கப்பட்டவர்களை திடீரென்று விடுதலை செய்ததுடன், அவர்கள்மீது இருந்த வழக்குகளெல்லாம் வாபஸ் பெற்றிருக்கிறார். சென்னை மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது இருந்த சில சதி வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறார். இந்த நல்ல முடிவுகளை மகிழ்ச்சியுடன் வரவேற்ற நம்மால், "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது மட்டும் ஏன் பரிவு காட்ட ஆச்சாரியார் மறுக்கிறார்" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

வழக்குகளை வாபஸ் பெறாதது மட்டுமல்ல, கொடுக்கப்பட்ட தண்டனை—அனுபவித்த சிறைவாசம் போதாதென்று, மேல்கொண்டு அப்பீல் செய்யும் நிலையில்தான் ஆச்சாரியாரின் ஆணவப் போக்கு இருக்கிறது.

அரசியல் நேர்மையும், கண்ணியமும் இருந்தால், பர்தி அறப்போர் வழக்குகளில் பம்பாய் சர்க்கார் காட்டிய முடிவை, ஆந்திரக் கிளர்ச்சி வழக்குகளில் தாம் எடுத்த போக்கையே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீதுள்ள வழக்குகளிலும், சட்ட நடவடிக்கைகளிலும், சென்னை அரசாங்கம் செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. ஆச்சாரியார் செய்வார் என்று நாம எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அரசியல் கண்ணியம், நேர்மை இரண்டும் அவர் அறியாத பண்பாடுகள். அவர் அறியாவிட்டாலும், அரசியல் நேர்மையிலும், கண்ணியத்திலும், நம்பிக்கையுள்ள தேசியத் தோழர்களாவது சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

கருணாநிதி இம்மாத நிகழ்ச்சி

டிசம் 18 : பேராவூரணி
„ 19 : அதிராமபட்டினம்
„ 20 : மாயவரம்
„ 27 : ராயப்பேட்டை (சென்னை)
„ 28 : செங்கற்பட்டு
„ 30 : சேலம்

☆

மாயவரம், டிச. 16—
தோழர் மு. கருணாநிதி அவர்கள் 18—12—53 வெள்ளியன்று காலை 8-30 மணிக்கு, திருவாரூரில் புறப்படும் புகை வண்டியில் பேராவூரணி பொதுக்கூட்டத்துக்குச் செல்லுகிறார்.

தூத்துக்குடி வழக்கு நிதி
(கோவை மாவட்டம்)

★

தூத்துக்குடி வழக்கு நிதிக்காக, கோவை மாவட்டச் சார்பில், 2000 ரூபாய் தருவதென, கோவை மாவட்டக் கழகம் தீர்மானித்திருப்பதை யொட்டி, வசூலாகியுள்ள தொகையும், அதைக் கொடுத்தவர்களின் விவரமும் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

கீழ்க்காணும் தொகை, கோவை மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வசம் இருக்கிறதென்பதையும், மொத்தமாக 2000 ரூபாய் சேர்ந்த பின்பு, அது சம்பந்தமாக ஏற்பாடு செய்யும் நிதியளிப்பு விழாவின்போது, அந்தத் தொகையை தலைமை நிலையத்துக்கு சேர்ப்பிக்கப்படுமென்பதையும், தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

போறுப்பாளர்,
தூத்துக்குடி வழக்கு நிதி.

திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமணியம்	100—0—0
,, முத்தமிழ்வளர்ச்சி மன்றம்	5—0—0
,, ஸ்டேன்ஸ் மில் தொழிலாளர்கள்	7—0—0
,, எம். கே. அழகிரி	1—0—0
,, கணபதி டெக்ஸ்டைல் தொழிலாளர்கள்	5—2—0
,, அனிகலத் தொழிலாளர்கள்:—	
ஆர். எஸ். மாரியப்பன்	2—4—0
கே. ஜி. பசுபதி	2—4—0
பி. வி. சின்னராசு	2—4—0
எம். திருவேங்கடம்	2—0—0
ஆர். எஸ். ஆறுமுகம்	2—0—0
ஆர். பழனியப்பன்	1—0—0
வி. கே. நடராசு	1—0—0
எஸ். கே. ஆர். தம்பி	1—2—0
சங்கராச்சாரி	1—2—0
வி. நடராசு பிரதர்ஸ்	1—4—0
எ. ஜி. ராமசந்திரம்	1—0—0
எஸ். ஆறுமுகம் செட்டியார்	1—0—0
ஆர். ராமசாமி	1—0—0
,, மு. புதூர் சானி முத்து கவுண்டர், கோபால், மவுன குருசாமி, கந்தசாமி, அப்துல் கரீம், பி. வி. மூர்த்தி எம். பி. நடராசு, ராமசுப்ரமணியம், எஸ். வரதராசு, மாணிக்கம், செல்வமணி, கிருஷ்ணசாமிப் பிள்ளை, நட்சணமூர்த்தி, சங்கரை, கண்ணன் ஆகியோர்	6—6—0
கோவை எஸ். பாட்சா, எ. கே. பகதூர்	1—0—0
சேலம் அன்னதானப் பட்டி தி.மு. கழகம்	1—0—0
ஈரோடு பரமசிவம்	1—0—0
ஊத்துக்குளி சண்முகம்	1—0—0
பாகுர் தி. மு. கழகம்	1—0—0
ஈரோடு பஸ் ஸ்டாண்டு தொழிலாளர்கள்	5—8—0
பெரியக்ரகாரம் இப்ராகிம்	1—0—0
மருடஞ்சாவடி கே. பி. எம். குப்புசாமி	2—0—0
பள்ளிபாளையம் பெரியசாமி, மாதேஸ்வரன், கிருஷ்ணன் குருசாமி ஆகியோர்	1—0—0
ப. கா. புதூர் தி. மு. கழகம்	5—0—0
கோவை கழக அனுதாபி கணபதி	1—9—3
கோவை, ஈரோடு பொதுக் கூட்டங்களில் காசு மாலைகள் மூலம்	27—14—9
ஆ மொத்தம் ...	192—12—0

சுயமரியாதை......!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை, டிச. 15—

இதுவரை நடந்துள்ள சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க சட்டமியற்றுவது பற்றி சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருவதாக இன்று சென்னை அசெம்பிளியில் கேள்வி நேரத்தின்போது சே. ஆர். விஸ்வநாதனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் சட்ட மந்திரி குட்டி கிருஷ்ணநாயர் கூறினார்.

கே: முன்பு நடந்த திருமணங்களை செல்லுபடியாக்க மட்டும் சட்டம் வருகிறதா? இனி நடக்கும் சுயமரியாதை கலியாணங்களையும் செல்லுபடியாக்க சட்டம் உத்தேசிக்கிறதா?

ப: பழைய குறைபாட்டை நிவர்த்திக்கவே சட்டம் செய்யப்படும். இனி நடக்கும் சு. ம. கலியாணங்களை செல்லுபடியாக்குவது சாத்தியமில்லை.

கே. சுயமரியாதைத்திருமணம் என்றால் அர்த்தமென்ன?

ப: ஹிந்து மதத் திருமணப் பழக்க வழக்கங்களின் பிரகாரமோ, திருமணப் பதிவு சட்டப் பிரகாரமோ இல்லாத திருமணங்கள்.

முதல் மந்திரி கேள்வி கேட்டுள்ள அங்கத்தினர் சுயமரியாதைக் கல்யாணம் என்ற வார்த்தையை உபயோகித்துள்ள விதத்திலிருந்து அது ஒரு தனிமுறை என்பது தெரிகிறது. பெரியார் ராமசாமி நடத்திவைக்கும் கல்யாணமே சுயமரியாதைக் கல்யாணம் என்று அழைக்கப்படுகிறது.

கே: இத்தகைய திருமணங்கள் எவ்வளவு நடந்துள்ளன?

முதல் மந்திரி: இத்தகைய திருமணங்கள் பதிவு செய்யப்படாததால் புள்ளி விவரங்கள் கிடையாது. ஆயினும் பெரியார் ராமசாமி இத்தகைய திருமணங்களை நிறைய நடத்துகிறார் என்று தெரிகிறது. இத்தகைய திருமணங்கள் செல்லுபடியாக மாட்டாது என்று சமீபத்தில் சென்னை ஹைகோர்ட் ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கையில் முடிவு செய்தது. இந்த முடிவு குழந்தைகளின் சொத்துரிமையைப் பாதிக்கும். ஆதலால், இதற்கு முன்பு, சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்க மசோதா தயாரிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர் சு. ம. கல்யாணங்களை செல்லுபடியாக்குவதும், அத்திருமணங்களால் பிறந்த குழந்தைகளை சட்டபூர்வமாக்குவதும் உத்தேசம். இனி நடக்கும் சு. ம. கல்யாணங்களுக்குப் பொருந்த, சட்டம் செய்வதவசியமில்லை; ஏனெனில், இனி நடக்கும் திருமணங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று தெரியும். அவ்வாறு செய்து கொண்டுவிடுவர்.

ரஷ்யா - பாக் ஒப்பந்தம்?

கராச்சி, டிச. 15—

ரஷ்ய சர்க்கார் பாகிஸ்தானிடம் அரிசி சப்ளை செய்வதாக இருந்தால், பதிலுக்கு கோதுமை சப்ளை செய்வதாக உறுதி கூறியிருக்கின்றனராம். இந்த யோசனைக்கு பாகிஸ்தான் என்ன பதில் சொல்ல உத்தேசித்துள்ளது என்பது தெரியவில்லை.

1953-ல் கைபெழுத்தான பண்டமாற்று உடன்படிக்கையின்படி ரஷ்யா, 1,50,000 டன் கோதுமையைக் கொடுத்து விட்டு, பாகிஸ்தானிடமிருந்து 22,000 டன் கச்சா சணலையும், 13,150 டன் கச்சா பருத்தியையும் பெற்றது.

பெரியகுளத்தில் 144

பெரியகுளம், டிச. 15—

இவ்வூரின் 144-வது பிரிவின் கீழ் பொதுக்கூட்டமோ, ஊர்வலமோ நடத்தலாகாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

13-ந் தேதி இங்கு நடைபெற்ற ஓர் நாடகத்தின் விளைவாக தி. மு. கழகம், திராவிடர் கழகத் தோழர்கள் ஓர் மாபெரும் ஊர்வலம் நடத்த இருந்தனர். இதை தடுக்கவே இந்தத் தடையுத்தரவு என்று சொல்லப்படுகிறது.

பிரிட்டனில் ரயில்வே வேலை நிறுத்தம்

லண்டன், டிச. 16—

பிரிட்டனில் அடுத்த ஞாயிறன்று ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய உத்தேசித்துள்ளனர். இது நடைபெற்றால் 1926க்குப் பிறகு இப்போதுதான் இந்த மாதிரி பெரும் வேலை நிறுத்தம் நடைபெறுகிறதென்று சொல்லாம்.

வ. உ. சி.யின் சிறப்பு

17—12—53 மாலை 4 மணிக்கு, திரு. மா. இராசமாணிக்கம் எம். ஏ., அவர்கள் 'வ. உ. சிதம்பரனாரின் சிறப்பு' பற்றி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பேசுவார்.

சைதாப்பேட்டை தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

17—12—53 வியாழன் மாலை 6-30 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அப்போது, பல பொருள்கள் பற்றி ஆய்ந்து முடிவு செய்யப்படும்.

திராவிடத்தை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்வதற்காக ஏற்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி, இது தற்பொழுதைக்கு மேற்கு வங்காளத்திலும், உத்தரப் பிரதேசத்திலும், கிழக்குப் பஞ்சாபிலும், பீகாரிலும், தாமோதர பள்ளத்தாக்குத் திட்டப் பகுதியிலுமே சுற்றுப் பயணம் செய்யும்.

தென்னிந்தியாவின் குடிசைத் தொழிலுக்கு இந்த மாற்றாந்தாய் அந்தி ஏன்? என்று நாம் கேட்கிறோம். தென்னிந்தியாவைப் புறக்கணிப்பதோடு நின்றுவிட்டால் நமக்குத்தடையேதுமில்லை. தென்னிந்தியாவைப் புறக்கணிப்பதற்குமேற்போய், தென்னியாவின் குடிசைத் தொழில்களுக்குத் தேவைப்படும் அரசாங்க உதவியையும் நிறுத்தி வைப்பதாயிருந்தால் நாம் தடை செய்ய வேண்டும். நமது குடிசைத் தொழில்களுக்கு வந்த கேடு என்ன என்று நாம் முன்னமேயே கூறியிருக்கிறோம். அந்தக் கேட்டைத் தீர்க்க வழி எது என்றும் நமக்குத் தெரியும். தேவைப் படுவதெல்லாம் பணமும், ஒழுங்கான அமைப்புந்தான். ஆனால், நமக்கு வியப்புத் தருவது என்னவென்றால், இந்தியா முழுதிலுமுள்ள கிராமத் தொழில்களைப் பற்றி அறிக்கை கொடுக்க ஏற்படுத்தப்பட்ட குழுவொன்று, தென்னிந்தியாவில் சுற்றுப் பயணம் செய்யாமலும், அங்குள்ள கிராமச்சாலைகளைப்பற்றி அறிக்கை கொடாமலும் இருப்பதுதான்.

['தமிழ் நாடு' 12—12—53-ல் தலையங்கத்தில் இவ்வாறு எழுதியுள்ளது.]

மதுரையில் தி.மு.க. சக்தி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் பேசினார்.

பொதுக்கூட்டத்தில் உண்டியல் மூலம் ரூபாய் 100—0—6 வசூல் செய்யப்பட்டது.

பொதுக்கூட்டத்தில், நூற்றுக்கணக்கான தோழர்கள் கழகங்களின் சார்பில் தோழர் கருணாநிதி அவர்களுக்கு அணிவித்த மலர் மாலைகள் மேடையை நிறைத்தது. கைத்தறித் துண்டுகள் வழங்கப்பட்டது. குறிப்பாக, தேவாரம், கோம்பைத் தோழர்களால் மூன்று ஏலக்காய் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பல கிளைக் கழகங்களின் சார்பில் தூத்துக்குடி வழக்கு நிதிக்காகப் பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

நாடகம்

இரவு 10-மணிக்கு மதுரை செல்லம் தியேட்டரில் தூத்துக்குடி வழக்கு நிதிக்காக, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எம். ஜி. சக்ரபாணி குழுவினர் நடித்த 'இன்பக் கனவு' நாடகம் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாடகமுடிவில் தோழர் கருணாநிதி அவர்கள் நாடகத்தையும், நாடகத்தில் நடித்த தோழர்களையும் பாராட்டிஅரியதொரு சொற்பொழிவாற்றினார்.

எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள், பாராட்டிதற்கும் பொது மக்களுக்கும் நன்றி கூறினார்.

தூத்துக்குடி வழக்கு நிதிக்காக கூட்டத்தில் கொடுக்கப்பட்டதும் உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்டதும் சேர்த்து மொத்தத்தில் ரூ 1005 தோழர் கருணாநிதி அவர்களிடம் நாடக மேடையில் கொடுக்கப்பட்டது.

விருதுநகரில் விமரிசையான வரவேற்பு

விருதுநகர், டிச. 15—

திருநெல்வேலியிலிருந்து மாலை 5-30 மணிக்கு இங்கு வந்து சேர்ந்த தோழர் கருணாநிதிக்கு நேற்று மாலை ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. இரயில் நிலையத்தில் நகர கழகத்தின் சார்பாக தோழர் ஆசைத்தம்பியும் மற்றும் பலரும் மாலைசூட்டி வரவேற்றனர். ஆயிரமாயிரம் தோழர்கள் "டால்மியாபுரத்தை கல்லக்குடியாக்கு! கருணாநிதி வாழ்க!" என்று முழங்கினர். நகரசபைத் தலைவர் தோழர் எம். எஸ். பி. நாடார் விருந்து மனையில் சிறிது ஓய்விற்குப் பின் தோழர் கருணாநிதி நகர மக்களின் பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டத்திற்கு தோழர் சிவ சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். பெரும் அளவுக்கு ஆயிரக்கணக்கான தாய்மார்களும் கூடியிருந்தனர். தோழர்கள் என் ரத்தினமும், அருப்புக்கோட்டை எம். எஸ். ராமசாமியும் பேசிய பின், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கழகத்தின் சார்பாக தோழர் கருணாநிதிக்கு மாலை சூட்டினார். படிப்பகங்கள், மன்றங்கள், தனிப்பட்டவர்கள் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தூத்துக்குடி வழக்கு நிதிக்கு படிப்பகங்களும், தனிப்பட்டவர்களும், தொழிலாளர்களும் நிதி அளித்தனர். உண்டியல் மூலம் ரூ. 11—13—6 வசூலாகியது. அதை தோழர் கருணாநிதியிடம் அளிக்கப்பட்டது.

தோழர் கருணாநிதி அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும்போது, 'கல்லக்குடி' போராட்டம் பற்றியும், அவருடைய சிறை அனுபவம்பற்றியும், ஆச்சாரியார் ஆட்சியில் உள்ள ஊழல் பற்றியும் தெளிவாகப் பேசினார். தோழர் ஆசைத்தம்பி நன்றிகூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது.

இந்திய விதவைக்கு எகிப்தில் தண்டனை!

2 ஆண்டு சிறை; 500 பவுன் அபராதம்!

கெய்ரோ, டிச 13—

டோலாரமணி என்ற 30 வயதான இந்திய விதவை பொருக்கு, 2 ஆண்டுக் கடுங் தண்டனையும், 500 எகிப்திய பவுன் அபராதமும், கெய்ரோ நீதிமன்றமொன்றில் விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய எகிப்திய சட்டப்படி, தடைசெய்யப்பட்டுள்ளபடி பர்மிட் இல்லாமல், பிரிட்டிஷ் பகுதி கப்பல் தளத்திலிருந்து, 60 பவுன் பெருமானமுள்ள சரக்கை ஏற்றுமதி செய்ய முயற்சி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் 10 யூதர்கள், 2 எகிப்தியர்கள் உள்பட மேற்படி தண்டனையளிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சட்டத்தின் கீழ், விதிக்கப்பட்டுள்ள தண்டனையானது மிகவும் அதிகபட்சமானதென கருதப்படுகிறது. தீர்ப்பைப் பற்றிய சாதக பாதக நிலைமைகளை அடுத்த வாரத்தில், ராணுவ கவர்னர் வெளியிடுவார் என்று தெரிகிறது.

டோலாரமணி, தனது குறைந்த வயதான இரு சிறுவர்களைப் பாதுகாக்க யாருமில்லையென்றும், தானும் இளம்விதவை என்பதை எடுத்துக் காட்டியும், தண்டனையைக் குறைக்கும்படி கெய்ரோ ராணுவ கவர்னருக்கு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

அரசாங்கத்தின் மீது ஊழியர்-வழக்குத் தொடரலாம்

பம்பாய் உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு

பம்பாய், டிச. 14—

தவறாக வேலையிலிருந்து நீக்கப்படும் சர்க்கார் ஊழியர்கள் சர்க்கார் மீது வழக்குத் தொடரலாமென பம்பாய் ஐகோர்ட் நீதிபதி ஜஸ்டிஸ் தேசாய் இன்று தீர்ப்பு கூறினார்.

பம்பாய் மகாலெட்சுமி ஸ்டேஷனில் டிப்டி ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து வந்த காஜரி சங்கர் சக்லா லஞ்சம் வாங்கியதாக வேலையிலிருந்து நீக்கப்பட்டது தவறு என அறிவிக்குமாறு கோரி தோழர் சக்லா வழக்குத் தொடர்ந்தார். நீதிபதி தீர்ப்பளிக்கையில் "இங்கிலாந்தின் சட்டம் எப்படி இருந்த போதிலும் இந்தியாவில் ஒரு உடன்படிக்கை சம்பந்தமாக ஒருவரை சர்க்கார் மீது வழக்குத் தொடர உரிமையுண்டு என்று குறிப்பிட்டு வாதி கோரியபடி உத்தரவிட்டார். ஆனால் வாதியை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள உத்தரவிட மறுத்துவிட்டார்.

பறிமுதல் செய்யப்பட்ட எகிப்து மன்னரின் சொத்து

10 கோடி பவுன் மதிப்புள்ளது

கெய்ரோ, டிச. 14—

எகிப்திய அரச குடும்பத்தினரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு சுமார் 10 கோடி பவுன் பெறுமானமுள்ளதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் பள்ளிகளில்...

லண்டன், டிச. 16—

பிரிட்டிஷ் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. 1955 முதல் 1960 வரை ஆண்டிற்கு 1020 ஆசிரியர்கள் தேவைப்படுவர் எனத் தெரிகிறது.

மதுரை இளைஞர் காங்கிரசார் மீது வழக்கு

மேலும் மூன்று சாட்சிகள் விசாரணை

மதுரை, டிச. 8—

தெற்குவாசல் நாடார் வித்யாசாலைத் தெருவில் உள்ள தாளமுத்து, நடராசன் நினைவுப் படிப்பகத்தைத் தாக்கி, அதில் இருந்தவர்களுக்கு காயம் உண்டு பண்ணியதாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த வி. கோபால், எம். வீரையா, எம். அலியார் உட்பட 27 பேர்கள் மீது போலீசாரால் தொடரப்பட்ட வழக்கு 8-12-53ல் நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். தங்கமணி முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது போலீஸ் தரப்பில் மூன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

தோழர் நடராசன்

முதலாவதாக தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினரான தோழர் நடராசன் போலீஸ் தரப்பில் சாட்சியமளித்தார். அப்போது அவர் கூறியதாவது :-

"நான் தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினராக இருந்து வருகிறேன்; கடந்த 15—3—53க்தேதி இரவு நாடார் வித்தியாசாலைத் தெருவில் உள்ள காமராஜ் இலவச வாசகசாலையின் ஆண்டு விழா நடைபெற்றது; அன்று இரவு சுமார் 100, 150 பேர்கள் அடங்கிய கூட்டத்தினர் படிப்பகத்தைத் தாக்கி, என்னையும் தாக்கிக் காயப்படுத்தினார்கள்; கூட்டத்தில் என். ஆர். தியாகராசன் பேசிய குரல் கேட்டது; கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது; அதன் பின்னர், இந்தக் கூட்டத்தினர் படிப்பகத்தைத் தாக்கினார்கள்."

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். அதற்கு சாட்சி பதிலளித்துக் கூறியதாவது :-

"படிப்பகத்தைத் தாக்கிய கூட்டத்தினர் அனைவரும் காமராஜ் வாசகசாலையிலிருந்துதான் வந்தார்கள் என்று திட்டமாகச் சொல்ல முடியாது; ஆனால், காமராஜ் வாசகசாலையைச் சேர்ந்த ஆணிமுத்து, மற்றும் சிலர் அக்கூட்டத்தில் இருந்தனர்; படிப்பகத்தைத் தாக்கியதுடன், அதிலிருந்த சாமான்களையும் சேதப்படுத்தினார்கள்."

தோழர் அன்பானந்தன்

புஞ்சை மேட்டுத் தெருவைச் சேர்ந்த தோழர் எம். எஸ். அன்பானந்தன் அடுத்தபடியாக சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது :-

"காமராஜ் வாசகசாலை ஆண்டு விழாவில் கல்லெறி நடந்தது; இதனால் தான் கூட்டம் குழப்பமடைந்தது; இக்கூட்டத்தினர், தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தை நோக்கிச் சென்றனர்; கூட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சுமார் 40 அடி தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன்; அன்று இரவு இந்த ஆண்டு விழாவில் அலியார் குழுவினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரிடையான பாடல்களை பாடினார்கள், அவருடைய பாட்டை போலீசார் தடை செய்தனர்; சம்பவம் நடைபெற்ற மறுநாள் போலீசார் என்னை விசாரணை செய்தனர்."

எதிரிகளின் வழக்கறிஞர் குறுக்குக் கேள்விக்குப் பதிலளித்துச் சாட்சி மேலும் கூறியதாவது :-

"காமராஜ் வாசகசாலை ஆண்டு விழாவின்போது கூட்டம் அதிகமாகவே இருந்தது; பல கட்சிக்காரர்களும் இக்கூட்டத்தில் இருந்தனர்; இக் கூட்டத்தில் பேசியவர்கள் நியாயமான முறையில் பேசவில்லை என்றே நான் எண்ணினேன்; கூட்டம் நடந்து கொண்டிருந்த சமயம் கல் விழுவதாக போடப்பட்ட சப்தத்தைக் கேட்டேன்; இதனால் கூட்டத்திலிருந்தவர்கள் எழுந்து பல திசைகளிலும் ஓடினார்கள்; இதை ஒட்டிக் கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது; நான் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவன், காங்கிரஸ் கட்சிக்கு எதிரான கொள்கையைக் கொண்டவன்."

தோழர் பேச்சிமுத்து

காமராஜ் வாசகசாலைக்கு முன்பாகக் குடியிருந்து வரும் பேச்சிமுத்து என்பவர் அடுத்தபடியாக விசாரிக்கப்பட்டார்; 'சத்தியமாகச் சொல்லுகிறேன்' என்று கூறிவிட்டுச் சாட்சியமளிக்குமாறு கோர்ட்டார் கேட்டுக் கொண்டனர்; சாட்சி இதற்கு மறுத்துவிட்டு, தான் உண்மையாகச் சொல்லுவதாகக் கூறினார்; பின்னர் அவர் சாட்சியமளித்ததாவது :-

"கடந்த 15—3—53-ந் தேதியன்று காமராஜ் வாசகசாலையின் ஆண்டு விழா நடைபெற்றது; ஆண்டு விழாக் கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது; கூட்டத்தினர் சுமார், 200 பேர்கள், என்னுடைய வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைய முயற்சித்தனர்."

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்குப் பதிலளித்துச் சாட்சி மேலும் கூறியதாவது :-

"சம்பவ தினத்தன்று நானும், காமராஜ் வாசகசாலையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும், மற்றும் சிலரும் எங்கள் வீட்டின் மேல் மாடியில் உட்கார்ந்திருந்தோம்; காமராஜ் வாசகசாலை ஆண்டுவிழாக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட கழகம் ஆகிய கட்சிகளைப் பற்றி தாக்கிப் பேசினார்கள்; பாட்டுகளும் பாடப்பட்டன; இந்தப் பாட்டுகள் எனக்குக் கோபத்தைக் கொடுக்கவில்லை; தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பகத்தில் நான் உறுப்பினராக இருக்கிறேன்; என்னுடைய வீட்டில் அண்ணாதுரையின் உருவப் படம் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது;

"கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டவுடன், கூட்டத்தினர் ஆத்திரம் கொண்டு என் வீட்டைத் தாக்கினார்கள்; மூங்கில் கம்பால் கதவை உடைக்க முயற்சித்தனர். இக்கூட்டத்தில் ஆணிமுத்து, வீரையா, அலியார் ஆகியோர் இருந்தனர்."

"வீட்டுக் கதவை உடைக்க முயற்சி செய்யும்போது மேல் மாடியிலிருந்து நான் வேகமாகக் கீழே இறங்கி வந்தேன்; வெளியே கூட்டம் அதிகமிருப்பதாலும், மூங்கில் கம்புகளுடன் இருப்பதாலும், வெளியே போக வேண்டாம், என்று கூறி என்னுடைய மனைவி என்னைத் தடை செய்து, ஒரு அறையில் தள்ளி விட்டாள்."

"நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்பதற்காகவும், அண்ணாவின் படம் தொங்கவிடப் பட்டிருந்ததாலுமே ஆத்திரம் கொண்டு இவ்விதம் கூட்டத்தினர் தாக்கினார்கள்."

மேலும் இந்த வழக்கு விசாரணையை 22-ந் தேதிக்கு மாஜிஸ்திரேட் தள்ளிவைத்தார்.

அரசாங்கத் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சுந்தரராஜ அய்யங்காரும், அவருக்கு உதவியாக தென் சரகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜரத்தினம், சப்-இன்ஸ்பெக்டர் திரு சி. முனிசாமி நாயுடுவும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே. எல். நரசிம்மனும் வாதாடினார்கள்.

தி. மு. கழக செயற் குழு தேர்தல்கள்

★

கிழப்பாவூர்

29—11—53-ல் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுவில், தோழர்கள்: அரு. இராமநாதன் செயலாளராகவும், இரா. தங்கவேல் துணைச் செயலாளராகவும், பி. ஆர். சிவன், பி. ஆர் வைகுண்டம் பொருளாளர்களாகவும், வே. சிவபெருமான் மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர்கள் : ஜே. பி. மணி, எஸ். என். இலச்சுமணன், என். பி. சாமி, தி. காளியப்பா, கே. ரங்கநாதன், என். எஸ். சுடலை யாண்டி, பி. எம். சந்தனமுத்து, வி. எம். முத்துஅரசு ஆகியோரும் செயற் குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாண்டுப் (பம்பாய்)

26—11—53-ல், தி. மு கழக செயற்குழுக் கூட்டம், கழக அலுவலகத்தில், தோழர் கே. என். அய்யா தலைமையில் நடைபெற்றது. அதுபோது; டி. ஏகாம்பரம் துணைச் செயலாளராகவும், தோழர்கள் : கே. செல்லபாண்டி, ஆர். தாசன், எம். டேவிட், எஸ். தானியேல் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை 7-வது வட்டம்

இவ்வட்ட தி. மு. கழகத்திற்குக் கீழ்க்கண்டோர் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : வெ. வேந்தன், துணைச்செயலாளர் : தி சிவாஜி ; பொருளாளர்: எஸ். கணேசன் ; மாவட்டப் பிரதிநிதிகள் : செயலாளர் பே. நா. இன்மொழியன் ; நிர்வாகக் குழு உறுப்பினர்கள் : மதனகோபால், செங்குட்டுவன், ஜெயசீலன், ஆலசத்தம்பி, துரைராஜ், பே. நா. இன்மொழியன்.

கிழ்மங்கலம்

29—11—53-ல் கூடிய தி. மு கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் : ஆர் என். ராமசாமி செயலாளராகவும், ஆர். பெருமாள் துணைச் செயலாளராகவும், டி. பி. அப்பாவு பொருளாளராகவும், ஆர். என். ராமசாமி மாவட்ட உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அத்துடன் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

குருவிக்கார்பை

குருவிக்கார்பை தி. மு. கழக செயற்குழு தேர்தல் தோழர் ஆர். வேணுக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் எம். கிருட்டிணமூர்த்தி செயலாளராகவும், ஆர். சுப்பையா துணைச் செயலாளராகவும், அருணாசலம் மாவட்டப் பிரதிநிதியாகவும், கே. எம். மணி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாலக்காடு

பாலக்காடு சுல்தான்பேட்டை (கிளை) சார்பில் 6—12—53-ல், தோழர் இரா. கிருட்டினன் தலைமையில் தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றினார் அதுசமயம் தீர்மானங்கள் பல ஏகமனதாக நிறைவேறின.

ஆனையாம்பட்டி

5—11—53ல், தோழர் சாமுவேல் இல்லத்தில், தோழர் சி. தங்கராசன் தலைமையில் நடைபெற்ற அங்கத்தினர்கள் கூட்டத்தில், தோழர் எ. என். அப்பாவு செயலாளராகவும், ஆர். சாமுவேல் துணைச் செயலாளராகவும், பி சோலைமுத்து பொருளாளராகவும், சி. தங்கராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், எ. என். அப்பாவு, ஆர். சாமுவேல், பி. சோலைமுத்து, சி. தங்கராசன், எஸ். சின்னையன், டி. ஆர். மாரியப்பா, ராமன், எ. பழனிமுத்து, ராசகண்ணு சின்னு, லோகநாதன் ஆகியோர் செயற்குழு அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்செந்தூர் தாலூகா தி. மு. கழக

நிர்வாகக் கமிட்டி கூட்டம்

29—11—53-ல், திருச்செந்தூர் வட்டகை தி. மு. கழகக் கூட்டம், நாசரேத்தில், தோழர் பி. எஸ். கே. ஜெயபால் அவர்கள் கட்டிடத்தில், தோழர் த. தனசேகரன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் வட்டகைக் கழகத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு தாலூகா கழகங்கள், வட்டகைக் குழு பொருளாளரிடம் டிச. 15-ந் தேதிக்குள் ரூ 10 கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதுடன், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

கூட்டத்தில் கலந்துகொண்ட கிளைக் கழகங்கள் :— நாசரேத், பாற்குளம், தெங்திருப்பேரை, ஆழ்வார்திருநகரி, குருகாட்டூர், சாத்தான்குளம், திருச்செந்தூர், மாவடிபண்ணை.

கரந்தை அன்பு மன்றம்

தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில், அன்பு மன்றத்தின் மூன்றாவது ஆண்டுவிழா 5—12—53-ல் நடைபெற்றது. தோழர் எஸ் எ சுபான், பண் பாடினார். தோழர் சுயம்பிரகாசம், பி ஏ, பி எல்., எம். எல். ஏ, தலைமை தாங்கினார்.

தோழர் சு சண்முகம் வரவேற்புரை ஆற்றினார் செயலாளர் அறிக்கை வாசித்தார். தோழர் வேல்சம்மந்தம் 'வள்ளுவர் கண்ட அன்பு' என்பது பற்றியும், கரந்தை கணேசன் 'உலக அரங்கில் நாம்' என்பது பற்றியும், தோழர் இராமனுஜன் 'திருந்திய சமுதாயம்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதம்

இலட்சியக் கனல்

ஆசிரியர், 'நம் நாடு' சென்னை.

ஐயா,

கடந்த ஜூலை மாதம், நமது கழகம் நடத்திய புதிய கல்வி எதிர்ப்புப் போராட்டம், கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம், ரயில் நிறுத்தப் போராட்டம் ஆகியவைகளின் பயனாக திராவிடப் பெருங்குடி மக்களில் பெரும்பாலோர் நமது கழகத்தின் கட்டுப்பாடுகளில் கவனம் செலுத்தவும், ஆதரவு தரவும் முன்வந்துள்ளனர். பட்டி தொட்டிகளிலும், நமது கழகக் கொள்கைகள் பரவி, திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை மக்கள் உணர்ந்துள்ளனர் என்பதற்கு, ஜூலை மாதத்திற்குப் பிறகு புதிதாக அமைக்கப்பட்டுள்ள — இப்பொழுதும் அமைக்கப்பட்டு வரும் கிளைக் கழகங்களே சான்றாகும்.

இனி, புதிய போராட்டங்களில் நமது கழகம் கலந்து கொள்ளும் பணியிலிருந்து இடைக்கால ஏற்பாடாக விலகி இருப்பதுடன், திராவிடமெங்கும் நமது பேச்சாளர்களைக் கொண்டு பொதுக் கூட்டங்களில் பேசச் செய்வதின் மூலம் நமது கழக லட்சியங்களைப் பரப்பவேண்டும். இன்னும் சில மாதங்களுக்கு 'பிரச்சாரம் — பிரச்சாரம்' — இதுதான் நமது முக்கிய பணியாக இருக்கவேண்டும் ஒவ்வொரு கிளைக் கழகங்களும் இன்றே [illegible] ஒவ்வொரு பேச்சாளரையும் தமது ஊருக்கு அழைக்கச் செய்து [illegible] நிறைவேற்றி செயலாற்ற வேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் இன்னும் [illegible] மக்களின் [illegible] நமது கழகத்திற்கு [illegible] பல உறுப்பினர்களை [illegible], சென்னை, திருச்சி, மதுரை [illegible] நகரங்களில் நடைபெறவிருக்கும் நமது கழக வழக்குகளுக்கு நிதி திரட்டவும் முடியும் என நம்புகிறேன்.

நா. ச வீ. சாமுவேல்சங்கரசுப்பு, கீலக்கோட்டை, 7—12—53

அசோக் மேதாவும், பர்தி அறப்போர் தொண்டர்களும் விடுதலை

—[0]—

பம்பாய், டிச 14 —

பர்தி அறப்போரில் ஈடுபட்டு 11 மாதங்கள் தண்டனை பெற்ற பிரஜா சோஷலிஸ்டு தலைவர் அசோக்மேதா, இன்று விடுதலை செய்யப்பட்டார். அவருடன் அறப்போரில் ஈடுபட்டு தண்டனையடைந்த தொண்டர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு பம்பாய் அரசாங்கம் உத்தரவு அனுப்பியுள்ளது.

மேலும், பர்தி அறப்போர் காரணமாக சர்க்காரால் தொடுக்கப்பட்டு இன்னும் முடிவு காணாத கோர்ட்டுகளில் இருக்கும் வழக்குகள் அனைத்தும் இன்று வாபஸ் பெறப்பட்டு விட்டன. வசூலிக்கப்படாது இருக்கும் அபராதங்களனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இப்படி விடுதலை செய்வதால் பிரச்னை தீர்க்கப்படுவதற்கு அமைதியான வழி பிறக்கு மென்று, பம்பாய் அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது

வட நாட்டில் புது அணைத் திட்டம்

37 கோடி ரூபாயில் தயாரிக்கப்படுகிறது

டெல்லி, டிச. 14—

பீகார் மாகாணத்தில் கோசி நதிப் பள்ளத்தாக்கில் 37 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்று மத்திய மக்கள் சபையில் திட்ட மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா அறிவித்தார்.

குறிப்பிட்ட பள்ளத்தாக்கு, நேபாளம்—பீகார் எல்லைப் புறத்தில் இருப்பதாகவும், இதற்கு இருசாரரின் அனுமதியையும் பெற்றவுடன் வேலைகள் ஆரம்பமாகுமென்று திரு. நந்தா அறிவித்தார். இந்தத் திட்டமும் இதனுடன் கூடியவைகளும் வந்து பெற்றால், பீகார் மாகாணத்தில் சுமார் 14 லட்சம் ஏகரா நிலங்கள் செழிப்புள்ளதாகும் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] இரா. செழியன் [illegible] எம். ஏ., அவர்கள் [illegible] வழியே அச்சகத்தில் [illegible] 24, [illegible]